பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர் : 16] சென்னை : ஐப்பசி 9 (25—10—68) வெள்ளி ★ வெளியூர் : ஐப்பசி 10 (26—10—68) சனி [இதழ் : 107

தனியே தொழில் நடத்தக் கூடாது !

டாக்டர்களுக்குத் தடை

ஐதராபாத், அக். 25—

ஆந்திர மாநிலத்திலுள்ள அரசாங்க டாக்டர்கள் தனியாக மருத்துவச் சிகிச்சை செய்வதற்கு ஆந்திர மாநில அரசு தடை விதித்திருக்கிறது. இந்தத் தடை நவம்பர் முதல் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்.

ஆந்திர மாநிலப் பொதுநலத் துறை இயக்குநர் செய்தியாளர்களிடம் பேசுகையில் இத்தகவலை வெளியிட்டார்.

பதவியல்ல-தொண்டே குறிக்கோள்

தொடர்ந்து பணி புரிந்திடத் துணை செய்வீர்

நாடு திரும்பும் அண்ணுவுக்கு வெற்றியைக் காணிக்கையாக்குவோம்

புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். வேண்டுகோள்

சென்னை, அக். 25 —

"கழகத்தின் சார்பில் நிறுத்தப்பட்டுள்ள வேட்பாளர்களை மக்கள் அறிந்தவர்கள் ; நாணயமும் நேர்மைக் குணமும் மிக்கவர்கள் ; 'மக்களுக்கு இவர்கள் தொண்டாற்றுவார்களா' என்பதைத்தான் எவரும் பார்த்திட வேண்டும் ; தி. மு. கழகம் இருப்பதே தொண்டுக்காகத்தான் -- பதவிக்காக அல்ல !

"மக்கள் அளிக்கின்ற வாக்குகள், ஒவ்வொரு வட்டத்திலும் நிற்கின்ற தனிப்பட்ட வேட்பாளர்களுக்கு மட்டுமல்ல --- அது, கழகத்துக்கு -- அதன் கொள்கைகளுக்கு அளிக்கின்ற வாக்கு ஆகும்.

"ஒரு வட்டத்து மக்கள் ஒன்பதாயிரம் பேரோ அல்லது பத்தாயிரம் பேரோ கழக வேட்பாளரை ஆதரித்து வாக்களிக்கிறார்கள் என்றால், அது, தமிழகத்தில் கழக உறுப்பினர்களாகவும் ஆதரவாளர்களாகவும் பெரும் படையெனத் திரண்டு நிற்கும் இரண்டு கோடிப் பேருக்கும் அளிக்கின்ற வாக்குகளாகும் ! நான்கு கோடி தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக ஆட்சியிலிருக்கும் கழகத்துக்கு அளிக்கின்ற வாக்குகளாகும்"

இவ்வாறு புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள், சென்னைத் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் விளக்கம் அளித்தார். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது :—

"'எல்லாம் எங்களுக்குத் தெரியும் --- செய்வோம்' என்று முன்பிருந்தவர்களைப்போல கூறக்கூடியதல்ல கழகம் ; குற்றம் குறையிருந்தால் எடுத்துச் சொல்லுங்கள் --- திருத்திக் கொள்கிறோம்' என்று அறிஞர் அண்ணா அவர்கள் சட்டமன்றத்திலேயே சொன்னார்கள் ! சனநாயகத் தத்துவமே அதுதான் !

இந்த வகையில் கழகம் மக்களுக்குத் தொடர்ந்து நல்ல தொண்டாற்றிட வாய்ப்பளிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மக்களின் நல்லெண்ணமும் ஒத்துழைப்பும் கழகத்துக்கு மிக மிகத் தேவை !

நீங்கள் அளிக்கும் வாக்குகள், கழகக் கொள்கைகளுக்கு அளிக்கும் வாக்குகளாகும் ! தமிழ் வாழ -- தமிழ் ஆட்சி மொழி ஆக -- இந்தியினால் தமிழ் அழியாதிருக்க -- டில்லியின் அதிகாரக் குவியல் பரவலாகி மாநிலங்களெல்லாம் மேலும் அதிகாரங்களைப் பெற -- டில்லியின் ஆதிக்கம்குறைய -- நீங்களெல்லாம் அளிக்கின்ற வாக்குகள் பயன்படும் ! மக்கள் மாறுபாடாக வாக்களித்தால், காங்கிரசுக்காரர்கள் கூறி வருவதை நியாயப்படுத்துவதாகப் பொருளாகும் ; 'கழகத்தின் கொள்கைகளை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை ; கழகம் புறக்கணிக்கப்பட்டுவிட்டது' என்று காங்கிரசார், கழகத்தைப் பார்த்து இழிசொல் கூற இடமளிக்கக் கூடாது.

அண்ணா அவர்கள் நாடு திரும்பும்போது, அவர் கேட்கின்ற செய்தி வெற்றிச் செய்தியாக இருக்க மக்கள் அனைவரும், கழகத்தின் தேர்தல் சின்னமான 'உதயசூரிய'னிலே முத்திரையிட்டு ஆதரிக்க வேண்டுமென வேண்டுகிறேன்.

கழகம் நிறுத்திய வேட்பாளர்களை இதுவரையில் ஆதரித்ததுபோல், இனியும் ஆதரித்து கழகம் தனது தொண்டினைத் தொடர்ந்து ஆற்றிட மக்கள் துணை செய்யவேண்டும்.

கழக வேட்பாளர் எவரும் தம் சொந்தச் செல்வாக்கையோ, பண பலத்தையோ நம்பிப் போட்டியிடவில்லை ! மக்களிடத்தில் கழகம் பெற்றுள்ள மதிப்பும், 'கழகத்துக்கே மக்கள் வாக்கு அளிப்பார்கள்' என்ற நம்பிக்கையுமே, தாங்கள் மாநகராட்சி மன்ற உறுப்பினராக ஆகித் தொண்டாற்ற முடியும் என்ற உணர்வை அவர்களுக்கு அளித்துள்ளது !"

இறுதி நேர வாய்ப்பு!

சென்னை, அக். 25—

தலைமைக் கழக முடிவுக்கு எதிராகச் சுயேச்சையாகப் போட்டியிடுவோர், இந்தக் கடைசி நேரத்திலாவது தேர்தல் போட்டியிலிருந்து விலகிக் கொள்வதன் மூலம், தாங்கள் இதுவரையில் கழகத்தின் வளர்ச்சிக்காக ஆற்றிய தொண்டு, தியாகம் யாவும் உண்மையானது --- சுயநலத்தின்பாற்பட்டதல்ல என்பதை மெய்ப்பிக்க வேண்டும். இவ்வாறு செய்தால் நாமும், கழகமும் அவர்களை மறந்துவிடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

---எம். ஜி. இராமச்சந்திரன்
(தேர்தல் கூட்டங்களில்)

தி.மு.க. திட்டம்!

சென்னை, அக். 24 —

"மாநகராட்சி நிர்வாகமானாலும் மாநில அரசு நிர்வாகமானாலும், ஏழை எளிய -- தாழ்த்தப்பட்ட -- நடுத்தர மக்களின் நலனை மையமாகக் கொண்டே தி. மு. கழகம் தன் திட்டங்களை வகுக்கும் -- வகுத்து வருகிறது !"

--அமைச்சர் கருணாநிதி

நினைப்புக்கு தக்க பலனை அடைந்தனர் காங்கிரசார்

சென்னை, அக். 25—

"நாம் எந்த ஒரு நிலையில் இருந்தாலும்கூட -- பகைவர் வாழும் இடமாக இருந்தாலும்கூட -- அதையும் நம் இடமாக நாம் மாற்றிக்கொள்ள வேண்டும் ; அந்த வகையில்தான் நாம் பணியாற்ற வேண்டும்.

"ஒரு தடவை மாற்றார் கையில் நம் வட்டம் போனால் நம் வட்டங்களுக்குச் செய்யும் வசதிகளைவிட அதற்கு அதிக வசதிகள் செய்து தரவேண்டும் ; அப்படிச் செய்தால்தான் போன வட்டம் திரும்பி நம் கைக்கு வரும் !

"காவிரி நீரையாவது, பெண்ணையாற்று நீரையாவது சென்னைக்குக் கொண்டுவரும் திட்டம் 1957-லேயே பொறியியல் வல்லுநர்களால் தீட்டப்பட்டது ; ஆனால் காங்கிரசு ஆட்சி, அத்திட்டத்தைச் செயல்படுத்தாமல் இருந்தது.

"1959-ல் சென்னை மாநகராட்சியின் நிர்வாகப் பொறுப்புகளைக் கழகம் மேற்கொண்டுவிட்டதால் -- இந்த நேரத்தில் இத்திட்டத்தைச் செயல்படுத்தினால் -- அதை வைத்துக்கொண்டு, 'எங்களால்தான் சென்னைக்குத் தண்ணீர் வந்தது' என்று தி. மு. கழகத்தார் கூறுவார்கள் ; அதன் மூலம் மேலும் வாக்குகளை மக்களிடம் பெற முயலுவார்கள் -- என்று நினைத்து, பொறியியல் நிபுணர்களால் திட்டம் தீட்டப்பெற்றும் செயல்படுத்தவில்லை. காங்கிரசு ஆட்சியாளர்கள் என்ன நினைத்தார்களோ அந்த நினைப்புக்குத் தகுந்த பலனை இன்று அடைந்தார்கள்.

"இந்தவகையில், மாற்றார்கள் ஆண்ட காலத்தில் சென்னை நகரம் வசதி பெறவில்லை ; கழகம் ஆளும்போதுதான் சென்னையின் குடிநீர்ப் பிரச்சினை தீர காவிரி நீர்த் திட்டம் போடப்பட்டு அதற்கான ஆக்கவேலைகள் விரைவாக நடைபெற்று வருகின்றன ; மாற்றாரைப் பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை.

"வாக்காளர் பெருமக்களுக்குச் சொல்லிக்கொள்வேன்--காளை மாட்டைக் கறைபடுத்தி விடாதீர்கள் ! தப்பித் தவறி கோடு கூடப் படவிடாதீர்கள் ! அதற்கு எந்தக் கேடும் இல்லாமல் உதயசூரியனில் முத்திரையிடுங்கள் ! உதயசூரியனைக் குத்தலாம் ; அதனால் அதற்கு எந்த ஊனமும் ஏற்பட்டுவிடாது ; ஆனால் காளை மாட்டைக் குத்துவது பாவம் !"

---இரா. நெடுஞ்செழியன்
(தேர்தல் பிரசாரக் கூட்டத்தில்)

அருமைத் தோழர்களே -- அயராது பணியாற்றுக!

"அன்பின் ஊற்றே -- ஆருயிர்த் தோழா -- ஆற்றல் நிறை வீரா ! இத்தனை நாள் செய்த வேலை பெரிதல்ல ; இன்னும் இரண்டு மூன்று நாட்கள் செய்திடவேண்டிய பணி மிக முக்கியம் !

வாக்காளர் பட்டியலைச் சரி பார்த்துவிட்டாயா ? தெருத் தெருவாகப் பிரித்து எழுதிவிட்டாயா ?

'இன்னின்ன வீதிக்கு இன்னின்னார்' என்று குழுக்கள் அமைத்து, அவர்பால் பொறுப்பை வழங்கிவிட்டாயா ? வீட்டுக்கு வீடு 'சிலிப்' கொடுத்துவிட்டாயா ? முகவரி மாறிய வாக்காளர்களின் கணக்குத் தயாரா ? இறந்துபோன வாக்காளர்கள், எழுந்து வராமல் பார்த்துக்கொள்ளக் கண்காணிப்புச் செய்துவிட்டாயா ?

தேர்தல் வேடிக்கை பார்க்காதது மட்டுமல்ல -- அந்த வேடிக்கை பார்க்க வருபவர்களையும் தயவுதாட்சண்யமின்றிக் கடிந்து கொண்டு, அவர்களைப் பணியாற்றத்தக்க இடம் பார்த்து அனுப்பிட ஏற்பாடுகள் செய்துவிட்டாயா ?

'தேர்தல் நாளன்று பரபரப்பு அடைவதில்லை -- பீதியடைவதில்லை -- அமைதியான முறையில் ஆக்கப் பணிகளை ஆற்றுவேன்' என்றுரைத்து அதற்கான திட்டங்களைத் தீட்டிவிட்டாயா ?

வீரனே -- வெற்றி உன் பக்கம்தான்' என்று நாடே கூறுகிறது ; எனினும், நீ காட்டுகின்ற ஒரு சிறு அலட்சியத்தால், உன் கைக்கு வரும் வெற்றிக் கனியைத் தட்டிப் பறித்திட முயலுவர் !

ஓய்வின்றி உழைத்துப் பழகியவனே ! ஒப்பற்ற செயல்வீரனே ! ஓட்டுச் சாவடிக்கு வாக்காளர் புறப்படுவதற்கு முன்புவரையில், அவர்களுக்கு, 'உதயசூரியன்' சின்னத்தை நினைவுபடுத்திடத் தவறாதே !

அதேபோல், தோழமைக் கட்சிகள் போட்டியிடும் வட்டங்களில் அவர்களின் சின்னங்களை வாக்காளர்களுக்கு நினைவுபடுத்து !

அயராதே -- அயராதே -- அருமைத் தோழா ! நீ விளைத்த கழனி -- நீ உழைத்த உழைப்பு -- நம் கழகம் ! அந்தக் கழகம் வெற்றி டலக் குவித்திட விரைந்து செயலாற்று !"

-- மறவன் மடல் : (25---10---68)

தமிழக அமைச்சரவை

நான்காம் திட்டம் பற்றி ஆய்வு

சென்னை, அக். 25—

பல்வேறு துறைகளும் அளித்துள்ள திட்டங்களின் அடிப்படையில், தமிழகத்தின் நான்காவது திட்டங்கள் பற்றி திரு. இரா. நெடுஞ்செழியன் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பரிசீலனை செய்யப்பட்டது.

அமைச்சரவை மீண்டும் நவ. 6-ம் நாள் கூடுகிறது ; அதுபோது மீண்டும் இத்திட்டங்கள் பற்றி ஆய்வு செய்யப்பட்டு இறுதி வடிவம் தயாரிக்கப்படும்.

தமிழகத்தின் நான்காவது திட்ட இறுதி நகல் நவம்பர் மத்தியில் திட்டக் குழுவிடம் அளிக்கப்பட்டுவிடும்.

உணருவதில்தான் தவறு

"மரியாதையை, 'புகழ்ச்சி' என்று தவறாகப் புரிந்துகொள்ளக் கூடாது ! மரியாதையின்மையை, 'அச்சமின்மை' என்று தவறாகப் புரிந்துகொள்ளக் கூடாது !"

—காந்தியார்

நம்நாடு

இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1999 ஐப்பசி 9 (25—10—68) வெள்ளி

மாநகராட்சி மன்றத் தேர்தல்---
வாக்காளர் கடமை

மாநகராட்சி மன்றத் தேர்தல் அக். 27-ம் நாள் நடைபெறப் போகிறது—வாக்குப் பதிவுக்கு இடையில் இருப்பது ஒரே ஒரு நாள்தான்.

இத்தேர்தலின் முடிவு எப்படி இருந்திடக்கூடும் என்பதில் நமக்குத் துளியும் ஐயமில்லை. இதற்கு முன் நடைபெற்ற இரண்டு மாநகராட்சி மன்றத் தேர்தல்களிலும் பெற்றிருந்த இடங்களைவிடக் கூடுதலான இடங்களைப் பெற்று மகத்தான வெற்றியை இந்தத் தேர்தலில் கழகம் பெறப்போகிறது என்பது வெறும் ஆருடம் அல்ல.

நமது கழகமும் -- தோழமைக் கட்சிகளும் சேர்ந்து, மொத்தமுள்ள 120 வட்டங்களிலும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளன. இவர்களுக்கு எதிராகக் காங்கிரசுக் கட்சி, வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது -- வட்டங்கள் அனைத்திலும்!

சில வட்டங்களில், 'ஜனசங்கம்' என்ற பெயரில் சிலர் போட்டியிடுகின்றனர். இப்பெயரில் ஒரு கட்சி இருக்கிறது என்பதைத் தலைநகர மக்களில் சிலருக்காவது விளம்பரப்படுத்தி வைப்பதற்கு, இத்தேர்தலை, கிடைத்தற்கரிய வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ளத் துணிந்துள்ள இரண்டொருவரின் நப்பாசையே இப்போட்டி.

மாநகராட்சி மன்றத்துக்கு இம்முறை நடைபெறுகின்ற தேர்தலில், இதுவரையில் நடைபெற்றுள்ள தேர்தல்களில் இடம் பெறாத -- பொருளற்ற வேடிக்கை ஒன்று இடம் பெற்றிருக்கிறது; அதாவது நமது கழகத்தவர்களாக இருந்துவந்த சிலர், 'சுயேச்சைகள்' எனப் பெயர் கூறிக்கொண்டு, கழகத்தின் சார்பில் நிறுத்தப்பட்டிருக்கின்றவர்களை எதிர்க்கத் துணிந்திருக்கின்றனர்.

இப்படிக் கழக வேட்பாளர்களாக நிற்கின்ற வட்டங்களில், 'சுயேச்சைகள்' என்ற போர்வையில் தேர்தலில் பங்கு கொண்டிருக்கின்ற முப்பது நபர்களின் போக்கு கண்டனத்துக்குரியதாகும். அவர்கள் அனைவர் மீதும் கழகத் தலைமை ஒழுங்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றது.

கழகம் உட்பட எந்த ஓர் அமைப்புக்கும், அந்த அமைப்பைச் சேர்ந்தவர்களிடை ஒழுங்கும் கட்டுப்பாடும் இருந்திட வேண்டியது கட்டாயமாகும். எந்த அளவுக்கு ஒழுங்குடனும், கட்டுப்பாட்டுடனும் ஓர் அமைப்பின் உறுப்பினர்கள் செயல்பட்டு வருகின்றனரோ அந்த அளவுக்குத்தான் ஓர் அமைப்பின் வலிவும் இருந்திடக்கூடும்.

இப்பொழுது, கழகத்தைவிட, அந்த முப்பது அடங்காப் பிடாரிகள், தங்களுடைய வலிவு கூடுதலாகும் எனத் தவருக மதித்துக்கொண்டு, கழக வேட்பாளர்களை எதிர்த்துத் தனித்தனியாகப் போட்டியிட முனைந்திருக்கின்றனர்.

இப்படிப் போட்டியிடத் துணிந்துள்ள முப்பது நபர்களில் இருபத்துமூன்று நபர்கள், கழகத் தேர்வுக் குழுவுக்கு மனுச் செய்துகொண்டு, அக்குழுவினுல் புறக்கணிக்கப்பட்டவர்களாவர்; மீதமுள்ள எழுவர், தேர்வுக் குழுவுக்கு மனுச்செய்து கொள்ளாமலே தேர்தலில் போட்டியிடுபவர்கள் ஆவர்.

இவர்கள் அனைவரும், தங்களுடைய வலிவை, ஓர் அமைப்பின் வலிவைவிட மிகுதியானதாக மதிப்பிட்டுக்கொண்டிருக்கின்ற ஆணவக்காரர்கள்! தவருன பதவி ஆசைக்குப் பலியாகி -- சில சுயநலமிகளின் தூண்டுதலுக்கு இரையாகி -- இத்தேர்தலில் போட்டியிடத் துணிந்துள்ள அப்பாவிகள் ஆவர்!

ஏற்கனவே தாங்கள் உறுப்பினர்களாக இடம் பெற்றிருந்த கழகத்துக்கு, 'தங்களால் முடிந்த அளவுக்கு ஊறு தேட வேண்டும்' என்ற நச்சு நினைப்புடன் தேர்தலில் போட்டியிடுகின்றவர்களாவர்! தாங்கள் போட்டியிடத் தீர்மானித்த நேரத்தில், தாங்கள் வெற்றி பெற வேண்டும் எனக் கருதிக்கொண்டுதான், கழக வேட்பாளர்களுக்குப் போட்டியாகத் தேர்தலில் கலந்துகொண்டார்கள்.

பின்னரோ, இவர்கள் தாங்கள் போட்டியிடிக்கூடிய இடங்களில் தங்களுக்கு வெற்றி கிடடாமற்போனுலும், 'கழக வேட்பாளர் வெற்றி பெற்றுவிடக்கூடாது' எனப் பாடுபட்டுத் தீர வேண்டிய நச்சு நினைப்பைப் பெற்றுவிட்டிருக்கின்ருர்கள். தங்களுக்கு ஏற்பட்டுவிட்ட இந்த நச்சு நினைப்பின் காரணமாக, காங்கிரசு வேட்பாளர்களின் வெற்றிக்குப் பாடுபடும் உலுத்தர்களாகத் தங்களை உருவாக்கிக்கொண்டுவிட்டார்கள்.

தேர்தல் வேளையில், தாங்கள் இடம் பெற்றிருந்த அரசியல் அமைப்பைச் சீர்குலைக்கச் செயல்படக்கூடிய இவர்கள் அனைவரும் உண்மையான சனநாயக வளர்ச்சிக்குக் கேடு விளைவிப்பவர்களாவர். இவர்கள் அனைவரும் அரசியல் பொது வாழ்வின் பரம விரோதிகளாவர்.

எனவே, இவர்கள் அனைவரையும் நகர வாக்காளர் பெருமக்கள் அலட்சியப்படுத்தி ஒதுக்கித்தள்ள வேண்டும். இவர்களுக்கு அளிக்கக்கூடிய வாக்குகள் ஒவ்வொன்றும், பொது வாழ்வைச் சீர்குலைப்பவர்களுக்கு அறிந்தோ அறியாமலோ அளிக்கப்படும் வாக்குகளாகும்.

இனித் தங்கள் வாழ்நாள் முழுதும், தேர்தல் என்ற சொல்லைக் கேட்டாலே இவர்களுக்குக் குலைநடுக்கம் ஏற்பட வேண்டும். இனித் தங்கள் வாழ்நாள் முழுதும், தேர்தலைப் பற்றி இவர்கள் கனவில்கூடக் கருதக்கூடாது. அந்த அளவுக்கு வாக்காளர்கள் இத்தேர்தலில் இந்த அரசியல் அனுதைகளுக்குப் பாடம் கற்பித்தாக வேண்டும்.

கழக வேட்பாளர்களுக்கு எதிராக இப்படிச் சிலர் போட்டியிடுவதைக் கண்டதும், அந்தத் தொகுதிகளிலெல்லாம், தங்கள் கட்சி வேட்பாளர்கள் வெற்றி பெற்றுவிடக்கூடும் எனக் காங்கிரசுத் தலைவர்களான சுப்பிரமணியமும், காமராசரும் மனக்கோட்டை கட்டிக்கொண்டிருக்கின்றனர். இந்தத் துரோகிகளின் போட்டியால், 'வாக்குகள் சிதறக்கூடும்; அப்பொழுது குறைவான வாக்குகளையே பெற்ருலும காங்கிரசு வேட்பாளர்கள் வெற்றி பெற்றுவிடுவார்கள்' என, இந்த இரண்டு தலைவர்களும் கனவு கண்டவண்ணமிருக்கின்றனர்.

அவர்கள் காண்பது நிறைவேற முடியாத வெறும் கனவுதான் என்பதை, இந்த இரண்டு தலைவர்களும் இத்திங்கள் இருபத்தெட்டாம் நாள் தெரிந்துகொள்ளுவார்கள். அதுவரையில், இந்த இரண்டு தலைவர்களும் ஆசைக் கனவு கண்டு களித்துக்கொண்டிருப்பதைக் கண்டு, நாம் ஏன் கவலைகொள்ள வேண்டும?

இந்தத் தேர்தலில், எப்படியாவது மாநகராட்சி மன்றத்தைக் கைப்பற்றிவிட வேண்டும் என்ற நினைப்பில் காமராசரும், சுப்பிரமணியமும் பறந்து பறந்து தேர்தல் பிரசாரம் செய்து வருகின்றனர். குறைவான இடங்களைக் காங்கிரசுக் கட்சி கைப்பற்றினுலும், அந்த வெற்றிக்கும் தாம்தான் காரணம் என வீராப்புப் பேசிக்கொள்ள வேண்டும என்ற முடிவுடனேயே காமராசரும், சுப்பிரமணியமும் தேர்தல பிரசாரத்தைச் செய்து வருகின்றனர்.

ஆனல், இந்த இரண்டு காங்கிரசுத் தலைவர்களும், சென்னை நகர வாக்காளர் பெருமக்கள் கழகத்தின்மீது வைத்திருக்கின்ற நம்பிக்கையையும் பற்றையும் தெரிந்தே உள்ளனர். உண்மை தெரிந்திருந்தாலும், 'அரசியல் எதிர்க் கட்சி' என்ற முறையில் இரண்டு காங்கிரசுத் தலைவர்களும், தேர்தல் பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இத்தேர்தலில் தங்கள் கடமை எது என்பதை, சென்னை நகர வாக்காளர் பெருமக்கள் தெளிவாக உணர்ந்து கொண்டுள்ளனர். சென்ற பொதுத்தேர்தலில், அக்கடமையை அவர்கள் செவ்வனே நிறைவேற்றியுள்ளனர். அக்கடமையை, இத்தேர்தலில் அவர்கள் மறந்திருக்க நியாயமுமில்லை -- காரணமுமில்லை.

கழக வேட்பாளர்களுக்குத் தரப்படுகின்ற ஒவ்வொரு வாக்கும், காங்கிரசுக் கட்சியின் ஆணவததுக்குத் தரபபடுகின்ற சம்மட்டி அடியாகும்.

கழக வேட்பாளர்களின் வெற்றி, நகர மக்களின் வெற்றி -- கழகத்தின் வெற்றி -- சனநாயகத்தின் வெற்றி!

—கா. க.

நகராட்சித் தேர்தல்கள்

1969 பிப்ரவரி இறுதி வாரத்தில் நடைபெறும்

சனவரி 16-ஆம் நாள் வாக்காளர்களின் இறுதிப் பட்டியல்

செய்தியாளர்களிடம் உள்ளாட்சித் துறை அமைச்சர் விளக்கம்

சென்னை, அக். 25 —

"தமிழ்நாட்டிலுள்ள 84 நகராட்சிகளுக்கும், 1969-ம் ஆண்டு பிப்ரவரி இறுதி வாரத்தில் தேர்தல்கள் நடைபெறும்.

"நகராட்சிகளின் வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து வெளியிடுவதற்கான கால அட்டவணையை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது; இதன்படி 1969 சனவரி 16-ம் நாள், வாக்காளர்களின் பட்டியல்கள் இறுதியாக வெளியிடப்படும்.

"வாக்காளர் பட்டியல் வெளியான 40 நாட்களுக்குப் பிறகு தேர்தல்களை நடத்த இயலும்"

என்று உள்ளாட்சித் துறை அமைச்சர் மா. முத்துசாமி அவர்கள், செய்தியாளர்களிடம் விளக்கிக் கூறினர். அவர் மேலும் தெரிவித்ததாவது :—

1969-ம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் நடைபெறவிருக்கும் நகராட்சி மன்றங்களுக்கான சாதாரணத் தேர்கல்களுக்கு வாக்காளர் பட்டியல்களைத் தயாரிக்கும் பணி (இப்போது) மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆலந்தூர் நகராட்சியைத் தவிர ஏனைய நகராட்சிகளின் வாக்காளர் பட்டியலைச் சுருக்கமான முறையில் திருத்தியமைப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆலந்தூர் நகராட்சியிலுள்ள பெரும்பாலான வீடுகளுக்கு இலக்கமிட்டதில் பல தவறுகள் இருப்பதால் அந்நகராட்சியின் வாக்காளர் பட்டியலை மட்டும் செம்மையான முறையில் திருத்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

நகராட்சி மன்றத் தேர்தல்களுக்கு வாக்காளர் பட்டியல்களைத் தயாரிக்க, சட்டமன்றத் தேர்தல்களுக்கென இறுதியாகத் திருததியமைக்கப்பட்ட வாக்காளர் பட்டியல்களையே அடிப்படையாக எடுத்துக் கொள்ளப்படும்; இதுவே அடிப்படை வாக்காளர் பட்டியலாக அமையும்.

இப்பட்டியல்களில் ஏற்கனவேயே சேர்ககப்பட்டிருந்து தற்போது மரணமடைந்திருப்போரின் பெயர்கள், மற்றும் மேற்சொன்ன பட்டியல்களில் உள்ள அச்சுப் பிழைகள் (ஏதேனுமிருப்பின்) முதலியவற்றை நீக்கும் வகையில், திருத்தங்கள் அடங்கிய திருத்தப் பட்டியல் ஒன்று தயாரிக்கப்படும்.

மேற்குறிப்பிட்ட அடிப்படை வாக்காளர் பட்டியலும், திருத்தங்கள் அடங்கிய பட்டியலும், 'வாக்காளர் வரைவுப் பட்டியல்' ஆக வெளியிடப்படும்.

1—1—1968 அன்ருே அல்லது அதற்கு முன்பாகவோ 21 வயதடைந்தவர்கள் மட்டுமே வாக்காளர் பட்டியல்களில் சேர்த்துக்கொள்ளப்படத் தகுதியுடையவர் ஆவர்.

சென்ற பொதுத் தேர்தல்களுக்குப்பிறகு வாக்குப் பதிவு செய்ய தகுதிபெற்ருேர் அனைவரையுமே வாக்காளர் பட்டியலில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்பதே அரசின் விருப்பம்; ஆயினும், அப்படி யார் வாக்காளர்களாகப் பதிவு செய்துகொள்ள தகுதியுடையவர்களாக உள்ளனர் என்பது பற்றிய தகவல்கள் வாக்காளர் பதிவு அதிகாரிகளிடம் இல்லையாதலால், அவர்களைப் பட்டியலில் சேர்த்துக் கொள்ள இயலாது.

எனவே, வாக்குப் பதிவு செய்வதற்கான வயதையடைந்து, அதன் காரணமாக வாக்காளர் பட்டியலில் தமது பெயர்கள் சேர்க்கப்படுவதற்கு உரிமையைப் பெற்ருேர் அனைவரும், தமது விண்ணப்பங்களை உரிய காலத்தில் அனுப்பிவைப்பது அவர்களுக்குள்ள கடமையாகும்.

விதிகளின்படி வாக்காளராகத் தம்மைப் பதிவு செய்துகொள்ள விரும்புவோர் மட்டுமே அதற்கான விண்ணப்பம் செய்ய முடியும்.

ஓர் அரசியல் கட்சியோ அல்லது ஓர் சங்கமோ, தகுதி பெற்றிருக்கும் வாக்காளர் ஒருவருக்காக விண்ணப்பம் செய்வது, சட்டத்திற்குப் புறம்பானது!

சட்டமன்றத் தேர்தலுக்கென இறுதியாகத் தயாரிக்கப்பட்ட பட்டியல்களுக்குப் பிறகுள்ள காலத்தில், தமது இருப்பிடங்களை மாற்றிக்கொண்டுள்ள வாக்காளர்களைப்பற்றிய தகவல்களையும் அதிகாரிகள் அறிந்திருக்கமாட்டார்கள். இம்மாதிரியான நிலைகளில்கூட, இருப்பிடங்களை மாற்றிக்கொண்டுள்ளவர்கள்பற்றிய தகவல்களை அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவருதல் வேண்டும்.

அரசியல் கட்சிகளும் நகராட்சி மன்ற உறுப்பினர்களும் அடங்கிய கூட்டம் ஒன்றினை உடனே கூட்டி, எவ்வாறு வாக்காளர் பட்டியல்கள் தயாரிக்கப்படவிருக்கின்றன என்பதைப்பற்றி அக்கூட்டத்தில் விளக்க வேண்டுமென வாக்காளர் பதிவு அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

பட்டியல் தயாரித்து வெளியிட அட்டவணை

வாக்காளர் பட்டியலைத் தயாரித்து, அவற்றை வெளியிடுவதற்கென, கீழ்க்காணும் கால அட்டவணையை அரசு நிர்ணயித்துள்ளது:—

திருத்தங்களின் பூர்வாங்கப் பட்டியலைத் தயாரித்தல்: 1-11-68.

திருத்தங்களின் பூர்வாங்கப் பட்டியலை அச்சிடுதல்: 15-11-68.

வாக்காளர் வரைவுப் பட்டியலை வெளியிடுதல்: 18-11-68.

உரிமை விண்ணப்பங்களையும், மறுப்புக்களையும் பரிசீலனை செய்து அவற்றின்மீது முடிவு செய்தல்: 26-12-68.

திருத்தங்களின் இறுதிப் பட்டியலைத் தயாரித்து அச்சிடுதல்: 15-1-69.

வாக்காளர் பட்டியல்களை இறுதியாக வெளியிடுதல்: 16-1-69.

வேண்டுகோள்

வாக்குப் பதிவு செய்யத் தகுதி பெற்ருேர் அனைவரின் பெயரும் வாக்காளர் பட்டியல்களில் சேர்க்கப்படுவதற்கு ஆவன செய்வது மட்டுமன்றி, மரணம் மற்றும் இருப்பிடம் மாற்றங்கள் காரணமாக நீக்கப்பட வேண்டிய பதிவுகளையும் அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்து, வாக்காளர் பட்டியல்களில் குறைகள் ஏதுமின்றி அவை நிறைவாக தயாரிக்கப்படுவதற்கு அரசியல் கட்சிகள், சங்கங்கள், மற்றும் பொதுமக்கள் ஆகியோர் முழுமனத்துடன் ஒத்துழைப்பை நலகுவார்கள் என அரசு மிகவும் எதிர்பார்க்கிறது.

தவறில்லாத முறையில் வாக்காளர் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டாலன்றி, வாக்குப் பதிவு நடைபெறும் நேரத்தில் ஆள் மாருட்டத்தைத் தடுத்து நிறுத்த இயலாது என்று அரசு வலியுறுத்த விரும்புகிறது.

அத்துமீறக் கூடாது!

"சீர்திருத்தம் செய்வதற்கான ஆர்வம்கூட, ஒருவனை, அத்துமீறி நடக்கும்படிச் செய்யக் கூடாது."

—காந்தியார்

அரிது அரிது---கலப்படமற்ற உணவைக் காண்பதரிது'

மத்திய அமைச்சரும் ஒப்புக்கொள்கிறார்

கோவை, அக். 25—

"உணவில் கலப்படம் செய்வது நாட்டில் நம்மை எதிர்நோக்கும் ஒரு தீங்காக அமைந்துவிட்டது!

"உணவில் கலப்படம் செய்பவர்களின் பிடியிலிருந்து எந்த உணவும் தப்பவில்லை! பால், பால் பண்டங்கள், கொழுப்புச் சத்துக்கள் எண்ணெய்கள், வாசனைப் பொருள்கள், பருப்பு மற்ற தானிய வகைகள், பக்குவப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்கள் முதலியன உணவுக் கலப்படத்திற்கு இலக்காகின்றன! மார்க்கெட்டில் கலப்படம் செய்யாத உணவைக் கண்டுபிடிப்பது அரிதாக இருக்கிறது!"

இவ்வாறு, மத்திய குடும்பக் கட்டுப்பாட்டு அமைச்சர் டாக்டர் எஸ். சந்திரசேகர், நிருபர்களிடை கூறியுள்ளார். அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

"சுகாதாரத் துறையில் நாம் வெகுவாக முன்னேறியபோதிலும், சத்தில்லாத உணவுப் பிரச்சினை, என்றும்போல தீவிரமாக இருந்துவருகிறது.

"மக்கள் உட்கொள்ளும் உணவின் அளவு போதுமானதல்ல; தரமும் குறைந்தது; இதற்கு மேலாக உணவில் தீங்கு உண்டுபண்ணும் பொருள்களையும் சேர்த்தால், நம் மக்களின் நிலைமையை எளிதில் புரிந்துகொள்ள முடியும்.

"வயது வந்தோரைவிடச் சிறுவர்கள், குழந்தைகளுக்குக் கடும் விளைவுகள் ஏற்படுகின்றன!

"உணவில் கலப்படம் செய்வதைத் தடுக்க உணவு கலப்படத் தடைச் சட்டத்தை மத்திய அரசு நிறைவேற்றியுள்ளது. சமூகத்திற்கு ஏற்படக்கூடிய இந்த ஆபத்தைச் சமாளிக்க மாநிலங்களுக்கும் அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

"உணவுச் சட்டங்களை மீறுகிறவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுத்து -- வழக்குத் தொடர்ந்து தண்டனை கிடைக்கும்படிச் செய்வது அவசியமாகும்.

"இந்தச் சமூக விரோதச் செயலை எதிர்த்துப் பொதுமக்கள் கருத்தை உருவாக்க மக்களிடையே இயக்கம் நடத்தவேண்டும். பயன்படுத்துவோர் சங்கம், இப்பிரச்சினை குறித்துப் பரிசீலனை செய்துவருகிறது; தக்க பொறுப்புணர்ச்சியுடன் இப்பிரச்சினையை அவர்கள் தீர்த்துவைப்பார்கள் என்று நம்புகிறேன்."

மத்திய அரசு நடவடிக்கை

பம்பாய், அக் 25—

"உணவுக் கலப்படச் சட்டத்திலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக ஒரு மாநிலத்தில் தயாரான கலப்பட உணவுப் பொருள்களை மற்றொரு மாநிலத்தில் விற்பவர்களைச் சமாளிக்க மத்திய நிறுவனத்தின்கீழ் இன்ஸ்பெக்டர்களை நியமிக்கும் பிரச்சினை குறித்து மத்திய அரசு சுகாதார இலாகா தற்போது பரிசீலனை செய்துவருகிறது"

என்று மத்திய சுகாதார அமைச்சர் டாக்டர் எஸ். சந்திரசேகர் அறிவித்தார்.

செயற்கை நில நடுக்கம்

விஞ்ஞான வளர்ச்சியின் வேகம்

கட்டடங்களின் எஃகுச் சட்டங்களை நில நடுக்கம் எவ்வாறு பாதிக்கிறது என்று கண்டறிவதன் பொருட்டு அமெரிக்கச் சட்டடப் பொறியியலாளர்களின் ஒரு குழு, கட்டுப்படுத்தக்கூடிய நில நடுக்கங்களை ஆய்வுக் கூடத்தில் உருவாக்கி வருகின்றது.

மனிதன் உருவாக்கும் இந்தச் செயற்கை நில நடுக்கங்களை மிகவும் மெதுவான வேகத்தில் நீர் விசைப் பளுவேற்றிப் பொறியின் துணையுடன் தோற்றுவிக்கிறார்கள். இந்த ஆராய்ச்சியின் பயனாக, இறுதியில் நில நடுக்கங்களை எதிர்த்துத் தாங்கக்கூடிய கட்டடங்களுக்கு வடிவம் வகுக்கவும், அவற்றைக் கட்டவும் வழி பிறக்கலாம்.

மூன்று மாடி உயரமுள்ள எஃகுச் சட்டங்கள் இடையருமல் உச்சியிலிருந்து தாக்கும் பளுவுக்கு உட்படுத்தப்படுகின்றன; புவி ஈர்ப்பும், கட்டுமானத்தின் பளுவும் எவ்வாறு எஃகுச் சட்டங்களைத் தாக்குமோ, அவ்வாறு செயற்கை முறையில் பளு தாக்குமாறு செய்வதே இதன் நோக்கம்.

மேலும், கடுமையான நில நடுக்கம் ஒன்றின்போது, ஒரு கட்டடத்தில் ஏற்படும் இயக்கங்கள் போன்று செயற்கை முறையில் தோற்றுவிப்பதன் பொருட்டு, எஃகுச் சட்டங்களின் பக்கவாட்டில் நிலப் பெயர்ச்சிகள் ஏற்படுத்துகின்றனர். இரண்டும் சேர்ந்தால் அது கிட்டத்தட்ட நில நடுக்கத்துக்கு இணையாகும்.

பண்ணுருட்டி தி. மா. மு. க.

பண்ணுருட்டி திராவிட மணவர் முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் 15—9—68 அன்று தோழர் எஸ். டி. இராசேந்திரன் தலைமையில் நடைபெற்றது; அதுபோது, கடலூர் வட்ட தி. மு. க. செயலாளர் ஏ. வி. தண்டபாணியை ஆணையாளராகக் கொண்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

தலைவர்: ஏ. பக்கிரிசாமி; துணைத் தலைவர்: ஜி. பாண்டுரங்கன்; செயலாளர்: பி சிவராமன்; துணைச்செயலாளர்: டி. மணி; பொருளாளர்: அப்துல் ரசாக்; மேலமைப்புப் பிரதிநிதி: ஆர். செயபாலன்; மேலும் ஒவ்வொரு கல்வி நிறுவனத்திலிருந்தும் 6 செயற்குழு உறுப்பினர்கள்.

குடிநீர்க் குழாய்த் திறப்பு விழா

சேலம், அக். 16—

சேலம் 18-வது வட்டம் பச்சமுத்து முதலி தெருவில் நகராட்சியால் அமைக்கப்பட்ட குடிநீர்க் குழாய்த் திறப்பு விழா, 14-10-68 அன்று நடைபெற்றது. விழாவிற்கு, சிற்றுளி சுப்பிரமணியம் தலைமை வகித்தார்.

குடிநீர்க் குழாயை ஈ. ஆர். கிருஷ்ணன் எம்.எல்.ஏ. திறந்து வைத்து, வட்ட நகராட்சி உறுப்பினர் பி. எஸ். மாணிக்கத்தின் பணிகளைப் பாராட்டினார்.

மற்றும் பி. வி. சீனிவாசன் எம்.சி., சி. பழனியப்பன் எம்.சி. ஆகியோரும் பேசினர்.

வட்ட நகராட்சி உறுப்பினர் பி. எஸ். மாணிக்கம் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

கழகத்துக்கு வாகை சூட்டுவீர்!

"அறிஞர் அண்ணா அவர்களது தலைமையில் அமைந்துள்ள தி. மு. கழக ஆட்சி, கடந்த 20 மாதங்களில் மிகவும் சிறப்பான முறையில் -- இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் காணாத வகையில் -- ஆட்சி புரிந்து பீடுநடை போடுகிறது!

"தமிழர்களின் சமுதாய இழிவை ஒழித்து, பல துறைகளிலும் உரிமைகளைப் பெற்றுத் தருவதில் அது தீவிரமாக இயங்கும் பகுத்தறிவாளர் ஆட்சியாக அமைந்துள்ளது!

"அக்கட்சி, சென்னை கார்ப்பரேஷனில் கடந்த 9 ஆண்டுகளாக ஆளும் கட்சியாக இருந்து மக்களின் அமோக ஆதரவை இதற்கு முன்பேகூட பெற்றுத் திகழும் ஒரு கட்சியாகும்.

"இடைத் தேர்தல்களிலெல்லாம் காங்கிரசுக் கட்சி போட்டியிட்டு முயன்றது போலவே இப்போதும் இதிலும் போட்டியிடுகிறது! இடைத் தேர்தலில் தி. மு. கழகம் வெற்றி வாகை சூடியது போலவே, இதிலும் நல்லவண்ணம் அதனை வெற்றி பெறச் செய்யவேண்டியது மக்கள் கடமையாகும்.

"மாநில ஆளுங்கட்சியாக தி. மு. கழகம் உள்ள நிலையில், அதே கட்சியாகிய தி. மு. க.-வை மாநகராட்சியிலும் உட்கார வைப்பதுதான் நகரின் வளர்ச்சிக் கண்ணோட்டத்தில் விரும்பத்தக்க ஒன்றாகும்.

"மாநகராட்சியில் ஒரு கட்சி ஆளுங் கட்சி—மாநிலத்தில் அதற்கு எதிர்க் கட்சி ஆளுங் கட்சி என்றால், அதனால் ஏட்டிக்குப் போட்டி என்ற மனப்பான்மை வளருமே ஒழிய நகரின் நலம் பெருக வாய்ப்பே இருக்காது.

"மாநகராட்சி என்பதே—குடிநீர், சாக்கடை, சாலை முதலிய நகர மக்களின் சுகாதாரத்தைப் பெரிதும் பேணும் அமைப்பே ஒழிய, அரசியல் போர்க்களம் அல்ல!

"அரசியல் கட்சிகளில் -- அதுவும் வெகுவாக வளர்ந்துவரும் ஒரு பெரிய கட்சியில் -- அடங்காப்பிடாரிகள் இருப்பது அதிசயமானதல்ல! அவர்கள்மீது துணிவுடன் நடவடிக்கை எடுத்த தி. மு. கழகத் தலைமையின் செயல் வரவேற்க வேண்டிய ஒன்றாகும்! கட்டுப்பாடே அற்ற முறையில் இயங்குவதைத் தடுக்க அதுதான் சிறந்த வழியாகும்!

"சென்னை நகர வோட்டர் பெருமக்கள், இதற்குமுன் தி. மு. க.-வுக்கு அளித்த ஆதரவைவிட அதிகமான ஆதரவை இந்தத் தேர்தலில் அளிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

"காங்கிரசின் பிரச்சாரமும், பூசலும், அதன் மதிப்பை நாளுக்கு நாள் கீழிறக்கிக் கொண்டு போய்க்கொண்டே இருக்கிறது!"

---'விடுதலை' தலையங்கம்: 23--10--68

சமுதாயத்துக்குத் தீங்கு!

தலைமை நீதிபதி எச்சரிக்கை

கொச்சி, அக். 24—

"மக்கள் தொகை பெருக்கத்துடன் சட்டங்களும் பெருகுகின்றன; இதன் விளைவாக வழக்குகளும் பெருகுகின்றன.

"ஒவ்வோர் ஆண்டும் சட்டங்கள் பல இயற்றப்படுகின்றன; தற்போதுள்ள சட்டங்களுக்குத் திருத்தங்கள் கொண்டுவரப்படுகின்றன.

"நீதியை நிர்வகிக்கும் நாங்கள், இத்தகைய புதிய சட்டங்களுக்கும் திருத்தங்களுக்கும் இசைவாகச் செல்ல இயலவில்லை; நீதிபதிகளுக்கு வேலைப் பளு அதிகமாகிறது; முடிவுறாமல் வழக்குகள் குவிந்துவிடுகின்றன"

என்று இந்தியாவின் தலைமை நீதிமன்றத் தலைமை நீதிபதி இதயதுல்லா சுட்டிக்காட்டியிருக்கிறார். அவர் மேலும் தெரிவித்ததாவது:—

"சட்டங்கள் அளவுக்குமீறி இருப்பதும், அளவுக்கு மீறி நீதிமன்றங்களில் வழக்குகள் இருப்பதும், சட்டங்களை அடிக்கடி எதிர்க்கும் நிர்ப்பந்தம் சமுதாயத்திற்கு இருந்துவருவதும் நன்மையன்று.

"அரசு நடவடிக்கைகளில் ஓரளவுக்கு நிதானம் அவசியமாகும்."

இந்தியாவின் முதற் போர்க் கப்பல்

தலைமையமைச்சர் இந்திரா மிதக்கவிட்டார்

பம்பாய், அக். 24—

நீர்மூழ்கிக் கப்பல்களை எதிர்த்துத் தாக்கும் வல்லமைமிக்க --- லியாண்டர் ரகத்தைச் சேர்ந்த இந்தியாவின் முதலாவது போர்க் கப்பலை, தலைமையமைச்சர் இந்திரா, நேற்று வெள்ளோட்டம் விட்டார்.

இந்தியாவிலேயே கட்டப்பட்ட இந்த முதலாவது போர்க் கப்பலுக்கு 'நீலகிரி' எனப் பெயரிடப்பட்டிருக்கிறது.

இந்தப் போர்க் கப்பலின் நீளம் 372 அடி; அகலம் 43 அடி. இது செல்வதற்கு வேண்டிய குறைந்தபட்ச ஆழம் 12 அடி. இதன் எடை 2,400 டன்.

30 000 குதிரை சக்திகொண்ட இந்தப் போர்க் கப்பலின் உச்சவரம்பு வேகம் 31 நாட்டுகள் ஆகும். விமான எதிர்ப்புத் துப்பாக்கிகள் இந்தக் கப்பலில் பொருத்தப்பட்டிருக்கின்றன.

இந்தப் போர்க் கப்பலின் மேற்பரப்பில் ஹெலிகாப்டர் தளம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது; நீர்மூழ்கிக் கப்பல்களைக் கண்டுபிடித்துத் தாக்குவதற்கு ஹெலிகாப்டரைப் பயன்படுத்துவார்கள.

தரையிலிருந்து வானத்துக்குச் செல்லும் ஏவுகணை, விமானத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்படும்.

இந்தப் போர்க் கப்பலின் உடற்பாகம் கட்டப்பட்டுள்ளது. சில முக்கியமான சாதனங்களும் கருவிகளும் பொருத்தப்பட்டுள்ளன இந்தக் கப்பல் வெள்ளோட்டம் விடப்பட்ட பிறகு, எல்லாவிதமான மின்னணுக் கருவிகளும் ஆயுதங்களும் அதில் பொருத்தப்படும்.

எல்லாச் சாதனங்களையும் பெற்ற வகையில் இந்தக் கப்பல் 1970-ம் ஆண்டு இறுதி வாக்கில் தயாராகும்; அதற்குமுன் பலவிதமான சோதனைகள் நடத்தப்படும்.

1971-ம் ஆண்டு மத்திவாக்கில் இந்தப் போர்க் கப்பல் கடற்படையில் சேரும். அதற்குமுன் கடற்படை பல்வேறு சோதனைகளை நடத்தும்.

அச்சுறுத்தும் எண்ணமில்லை

தலைமையமைச்சர் விளக்கம்

"இந்துமாக் கடலில் ஆதிக்கம் செலுத்த வேண்டுமென்பதோ, வேறு எவரையும் அச்சுறுத்த வேண்டுமென்பதோ நமது நோக்கமல்ல; அல்லது, இப்பகுதியிலிருந்து இப்போதுள்ள வல்லரசுக் கடற்படை திரும்பப் பெறப்படுவதால் சூனிய நிலை ஏற்படக்கூடும் எனக் கற்பனை செய்யப்படுவதால் அந்தச் சூனிய நிலையை நிரப்புவதோ இந்தியாவின் எண்ணமன்று"

என, விழா உரையாற்றுகையில் தலைமையமைச்சர் இந்திரா தெளிவுபடுத்தினார். மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"இந்தியக் கடற்படையை நவீனமயமாக்கிப் பலப்படுத்தும் வகையில், இந்தப் போர்க் கப்பல் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

"நாட்டின் 30,000 மைல் நீளமுள்ள கடற்கரையும், வங்கக் கடலிலும் --- அரபிக் கடலிலும் உள்ள தீவுகளையும் பாதுகாக்கவும், துரிதமுடன் விரிவடைந்து வரும் கடல் வாணிபத்துக்கும் திறமைமிக்கதும் விழிப்புடன் இருப்பதுமான கடற்படை நமக்கு அவசியமாகும்."

"இந்த ஒன்றைத் தவிர, இத்துறையில் நமக்கு வேறு எவ்வித நோக்கமும் கிடையாது."

அறிஞர் அண்ணா பிறந்த நாள் ஊர்வலம்

முதல்பரிசு பெற்ற அலங்கார ஊர்தி

சென்னையில் கடந்த 22—9—68 அன்று நடந்த அறிஞர் அண்ணா பிறந்தநாள் ஊர்வலத்தில் பங்கு கொண்ட அலங்கார ஊர்திகளில், 106-வது வட்டக் கிளையின் சார்பு மன்றமான எஸ். எஸ். ஆர். மன்றம், வியாபாரிகள் மன்றம் ஆகியவை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட அலங்கார ஊர்திக்கு சென்னை மாவட்டக் கழகச் சார்பில் அமைச்சர் கருணாநிதி அவர்களால் முதல் பரிசு வழங்கப்பட்டது.

மன்றங்களின் சார்பில் தியாகராய நகர் அன்பழகன் பழக்கடை உரிமையாளர் கே. ஜெயராமன் பரிசினைப் பெற்றுக்கொண்டார்.

ரூபாய்க்கு ஒரு படி அரிசி அளந்துபோடும் காட்சி அந்த ஊர்தியில் அமைக்கப்பட்டிருந்தது.

செய்திக்கு மறுப்பு

"'தினமலர்' என்ற இதழில், 'தேவகோட்டை தி. மு. க.-வில் பிளவு' என்று தலைப்பிட்டும், 'நகரச் செயலாளர், வட்டச் செயலாளர் ஆகியோர், தேவகோட்டை வள்ளுவர் படிப்பகத்திற்குப் பேச்சாளர்கள் வரக்கூடாது என்று தகவல் கொடுத்தும் மீறி வந்து பேசியவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று வட்டச் செயலாளர் கூறுகிறார்' என்றும் செய்தி வெளியிடப்பட்டிருப்பதை கழக நண்பர்கள் என்னிடம் சுட்டிக் காட்டினர்.

"நான், 'தினமலர்' இதழ் நிருபருக்குப் பேட்டியோ, அறிக்கையோ எதுவும் கொடுக்கவில்லை; என்றும்போல் திருவாடானை வட்டத்தில் கழக வளர்ச்சியில் ஈடுபடுமாறு கழகத் தோழர்களைப் பணிவுடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்"

என்று திருவாடானை வட்டச் செயலாளர் நவ. மார்க்கண்டேயன் தெரிவிக்கிறார்.

அண்ணு சென்னை திரும்பும் நாள்

இன்று டாக்டர்கள் முடிவு

சென்னை, அக். 25—

நேற்று அண்ணு அவர்களின் உடல் நிலை பரிசோதிக்கப்பட்டது. அண்ணு முழு நலம் பெற்றுவிட்டார் என்பது இப்பரிசோதனை மூலம் தெரியவந்தது.

உடல்நலம் முழு அளவில் தேறிவிட்டதால் சென்னைக்கு எப்போது திரும்புவது என்பது பற்றி இன்று டாக்டர்கள் முடிவு செய்து கூறுவார்கள்.

மில்லருக்குப் பரிசு

அண்ணு அவர்கட்கு வெற்றிகரமாக அறுவைச் சிகிச்சை செய்த டாக்டர் மில்லருக்கும், அவருக்கு உதவியாக இருந்தவர்கட்கும் தமிழ்நாட்டிலிருந்து பல்வேறு பரிசுப் பொருள்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

தந்தத்திலான அழகிய சிற்பங்கள்; திருவள்ளுவர் உருவத்துடன்—சேர, சோழ பாண்டியர்களின் வில், -- புலி, -- கயல் சின்னங்களும் பொறிக்கப்பட்ட பொன்னுடை, பட்டுச் சேலைகள் பட்டுச் சால்வைகள் ஆகியவை பரிசுப் பொருள்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன.

தமிழ்நாட்டுச் சிற்பிகளின் கைத்திறனுக்கும், கைத்தறி நெசவாளர்களின் திறமைக்கும் சான்ருகத் திகழும் இப்பொருள்களை, அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், மு. கருணநிதி ஆகியோர் பார்வையிட்டுத் தேர்ந்தெடுத்தனர்.

இவற்றை அண்ணு அவர்கள் டாக்டர் மில்லருக்கும், மற்றவர்கட்கும் வழங்குவார்.

ஊர்வலம் -- பொதுக் கூட்டங்கட்குக் கட்டுப்பாடு

சென்னை, அக். 25—

நகர போலீசு சட்டத்தின் 41-வது பிரிவின்கீழ், சென்னை நகரம் முழுவதிலும் கூட்டங்கள் --- ஊர்வலங்கள் முன் அனுமதியின்றி நடத்தக்கூடாது என்று போலீசுக் கமிஷனர் ஆணை பிறப்பித்துள்ளார்.

அக். 24—25-ம் நாள் நள்ளிரவிலிருந்து ஒரு வார காலம் வரையில் இந்த ஆணை நடைமுறையில் இருக்கும்.

திருமணங்கள், சவ ஊர்வலங்கள், திருவிழாக்கள் போன்றவை கட்கு வழக்கம்போல் விதி விலக்கு உண்டு.

நகராட்சித் தேர்தலையொட்டிய கூட்டங்கள் --- ஊர்வலங்களுக்கும் விதிவிலக்கு உண்டு.

விடுதலைப் போராட்ட வீரர்கட்கு உதவிபணம்

விண்ணப்பம் அனுப்பக் கடைசி நாள்

சென்னை, அக் 25—

தகுதி வாய்ந்த சுதந்தரப் போராட்ட வீரர்கட்கு, அரசு விதிக்கும் சில நிபந்தனைகட்கு உட்பட்டு, மாதம் ரூ. 50 ஓய்வு ஊதியம் அளிக்கும் திட்டம், 1—10—66-லிருந்து அனுமதிக்கப்பட்டிருப்பது, மாநிலத்தைச் சேர்ந்த சுதந்தரப் போராட்ட வீரர்கள் அனைவருக்கும் தெரியும்.

இந்தத் திட்டம், இந்தியத் தேசிய இராணுவ வீரர்களுக்கும் விரிவு படுத்தப்பட்டிருக்கிறது.

சுதந்தரப் போராட்ட வீரர்கள் ஓய்வு ஊதியம் கோரி, மனுச் செய்வதற்கான காலத்தை வரம்பின்றி நீட்டிப்பது அவசியம் இல்லை என்று அரசு கருதுகிறது; எனவே, ஓய்வு ஊதியம் கோரிச் செய்யப்படும் மனுக்களை ஏற்பதற்கு காலக் கெடு நிர்ணயிப்பது என்று அரசு முடிவு செய்திருக்கிறது.

இதன்படி, ஓய்வு ஊதிய மனுக்களை நிர்ணயிக்கப்பட்ட வடிவில் அந்தந்த மாவட்ட கலெக்டர்களிடமும், அரசிடமும் அளிப்பதற்கு 31—12—68-தான் கடைசி நாள் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

சுதந்தரப் போராட்ட வீரர்களிடமிருந்தும் முன்னுள் இந்தியத் தேசிய இராணுவத்தினரிடமிருந்தும் மனுக்கள் 31—12—68-க்குப் பின்பு எக்காரணம் கொண்டும் ஏற்கப்படமாட்டா.

கேரள அமைச்சர் மறைவு

மஞ்சேரி, அக். 25—

கேரள மாநில உள்ளாட்சித் துறை அமைச்சர் எம். பி. எம். அகமத் குரிக்கல் நேற்று இயற்கை யெய்தினர்.

48 வயதுள்ள அவருக்கு வயதான தந்தை, மனைவி, நான்கு மகள்கள், மூன்று மகன்கள் உள்ளனர்.

இன்று காலை அவரது இறுதிச் சடங்குகள் நடைபெற்றன.

நலத்துறை அமைச்சர்

எஸ். ஜே. சாதிக்பாட்சா

நிகழ்ச்சிகள்

அக். 26 காலை 10 மணி : கோவை —பால் பெருக்க விழாவைத் துவக்கிவைத்தல்; மாலை 3மணி: சோமனூர்—ஏழை மக்களுக்கும், நிலமில்லாதவர்களுக்கும் 'பட்டா' வழங்குதல்; 5-30 மணி: கோவை 19-வது வட்டத்தில் காசநோய் அஞ்சல் தலை துவக்கவிழா.

அக். 28 காலை 10-30 மணி: கோவையில் குடும்ப நலக் கட்டுப்பாட்டு விழாவைத் துவக்கி வைத்தல்.

அமுதா ராகவன்

நிகழ்ச்சிகள்

அக். 27 : உடுமலை; 28 : பொள்ளாச்சி; 29 : முகையூர்; 30 : இராசபாளையம்.

நல்லெண்ணம் எனக்குத் தலைசிறந்த மாமருந்து!

இராஜாஜிக்கு அண்ணு மடல்

சென்னை, அக். 25—

★ "இங்குள்ள நமது தூதர் ஜி. பார்த்தசாரதிக்கு எனது இதயபூர்வமான நன்றிகளை எப்படிச் சொல்வது என்றே தெரியவில்லை; எனக்கு ஓர் உடன் பிறப்பாக அவர் இருக்கிறார்; அவரைவிட அன்பான இதயம்படைத்த ஒருவரை -- பண்புள்ளம் கொண்டவரை நான் கண்டதில்லை !

★ "நம் நாட்டு அரசியல் நிலைபற்றி நான் அவ்வப்போது கவலை கொண்டாலும், என் தோழர்களுக்கு வழிகாட்டவும், மக்களை முன்னின்று நடத்திச் செல்லவும் தாங்கள் அங்கு இருக்கின்றீர்கள் என்பதிலிருந்து நம்பிக்கையும் உற்சாகமும் பெறுகிறேன்.

★ "பொறுமையுடன் தாங்கள் விதைத்துக் கொண்டிருக்கும் சிந்தனைகள், களர் நிலத்தில் விழுந்துவிடவில்லை என்று திண்ணமாக நம்புகிறேன் ; எதிர்காலத்தில் பசும் பயிர்கள் எழும்புமென நம்புகிறேன்"

இவ்வாறு அறிஞர் அண்ணு அவர்கள், அக். 11-ந்தேதியிட்டு இராஜாஜி அவர்களுக்கு எழுதியுள்ள மடலில் பற்றுடனும் பாசத்துடனும் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டிருக்கிறார்கள்; மடல் வருமாறு:—

மதிப்பிற்குரிய இராஜாஜி அவர்கட்கு !

"மருத்துவமனையிலிருந்து வெளிவந்த அன்றே தங்களுக்கு எழுத விரும்பினேன்; ஆனல் அப்போது மிகவும்பலவீனமாக இருந்தேன்; அதோடு, டாக்டர் மில்லர் மேற்கொண்டு தெரிவிக்கும் கருத்துக்காகவும் காத்திருந்தேன்.

அக். 10-ம் நாள் டாக்டர் மில்லர் என்னை மீண்டும் பரிசோதித்துப் பார்த்து, முழுத்திருப்தி தெரிவித்தார்; ஆயினும் நான் இம்மாத இறுதிவரையில் இங்கு நீடித்தது தங்கவேண்டும் என்று கூறினர். மீண்டும் இம்மாதம் 14-ந் தேதி நான் டாக்டர் மில்லரைச் சந்திக்கிறேன்.

தங்களது கடிதத்தில், தாங்கள் பேரனுடன் குறிப்பிட்டது போல், புதிய சாப்பாட்டு முறைக்கு நான் எந்த அளவுக்கு என்னைச் சரிப்படுத்திக்கொள்ளப் போகிறேன் என்பதே பிரச்சினை.

இதுவரையில் நான் முழுச் சாப்பாடு உட்கொள்ளும் நிலையில் இல்லை; இருப்பினும், அதனுல் நான் அயர்வாகவோ, பலவீனமாகவோ இருப்பதாக உணரவில்லை.

தங்களது நல்லெண்ணம் எனக்குத் தலைசிறந்த மாமருந்தாக வேலை செய்தது. தங்களிடமிருந்து வந்த அன்புமொழிகளை நான் என்றென்றும் நினைவில் வைத்திருப்பேன்.

மூக்குப்பொடி போடுவது பற்றித் தங்களது அறிவுரைப்படி நடக்க எல்லா முயற்சியும் எடுத்திருக்கிறேன். சிறிது காலத்திலேயே இம்முயற்சியில் வெற்றிகாண முடியும் என நம்புகிறேன்.

திரு. சதாசிவத்துக்கும் அவர்தம் துணைவியாருக்கும் எனது வணக்கத்தைத் தயவுசெய்துதெரிவிக்கவும். சென்ற மாதத்து 'சுயராஜ்யா' இதழ்களை இங்கு அனுப்பி வைத்தால் மிக்க மகிழ்ச்சியடைவேன்.

காந்தி நாள் பற்றிய தங்கள் கட்டுரையை படித்தேன்; அதில் பொதிந்திருந்த தங்களது ஆழ்ந்த தாபத்தை உணர்ந்தேன்.

சில ஆண்டுகளுக்குமுன் சென்னை மாநகராட்சியின் வரவேற்பில் தாங்கள் நிகழ்த்திய உரை என் நினைவுக்கு வந்தது."

சட்டத்துறை அமைச்சர்

செ. மாதவன்

சுற்றுப்பயணம்

அக். 29 : காலை 10-30 மணி: நெடுவாசல் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடத் திறப்புவிழா; 11-30 மணி: ஆவணம் — பேராவூரணி ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; ஒன்றிய அலுவலகக் கட்டிடத் திறப்பு; மாலை 3 மணி: பூனைகுட்டிக் கொல்லையில் சேதுபாசன சத்திரம் ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; 3-30 மணி: குருவிக்கரம்பை உயர்நிலைப் பள்ளிக் கட்டிடத் திறப்பு; 4-30 மணி: அமரசிம்மேந்திரபுரம் துவக்கப் பள்ளிக் கட்டிடத் திறப்பு; 5 மணி: குடவாயில் துவக்கப் பள்ளிக் கட்டிடத் திறப்பு; 6-30 மணி: பேராவூரணி பொதுக்கூட்டம்; இரவு 8 மணி: பட்டுக்கோட்டை—பொதுக்கூட்டம்.

அக். 30: காலை 10 மணி : சோழம்பேட்டை பள்ளிக் கட்டிடத் திறப்பு; 11 மணி : சித்தக்காடு கூட்டுறவு நவீன அரிசி ஆலைக்கான அடிக்கல் நாட்டல்; மாலை 3 மணி: திருச்சிற்றம்பலம்; 5 மணி: மணல்மேடு — பரிசளிப்பு விழா; 6 மணி: பொதுக்கூட்டம்; 7 30 மணி: மாயூரம்—பொதுக்கூட்டம்.

தமிழக அரசின் பரிசுச் சீட்டு

நாட்டு மக்கள் காட்டும் நல்லாதரவு

நவம்பர் குலுக்கலுக்கு 40 இலட்சம் சீட்டுகள்

திருச்சி, அக். 25—

தமிழக அரசின் பரிசுச் சீட்டுத் திட்டத்தின்கீழ் நவம்பர் 20-ம் நாள் நடைபெறவிருக்கும் இரண்டாவது குலுக்கலுக்காக ஒவ்வொரு வரிசையிலும் 10 இலட்சம் டிக்கெட்டுகள் அடங்கிய இரு வரிசைகளின் ('கே' வரிசை; 'எல்' வரிசை) விற்பனை துவங்கப்பட்டுவிட்டது.

இரண்டாவது சீட்டுக் குலுக்கலுக்காக அரசு ஏற்கனவே அக்டோபர் 15-ந்தேதி முதல் இரு வரிசைகளின் ('ஐ', 'ஜே') டிக்கெட்டுகளை விற்பனை செய்திருக்கிறது; அந்த டிக்கெட்டுகள் அனைத்தும் அநேகமாக விற்பனையாகிவிட்டன.

நவம்பர் 20-ந்தேதி நடைபெறவிருக்கும் இரண்டாவது குலுக்கலுக்கு 30 இலட்சம் டிக்கெட்டுகளை மாத்திரம் விற்பனைக்கு வெளியிட்டால் போதும் என்று துவக்கத்தில் அரசு தீர்மானித்திருந்தது; ஆனல் பரிசுச் சீட்டுகளுக்கு மிகவும் கிராக்கி இருப்பதால், 40 இலட்சம் டிக்கெட்டுகளை விற்பனைக்கு வெளியிடுவதென்று தீர்மானித்தது; ஏற்கனவே அரசு, இரு வரிசைகளை (ஒவ்வொரு வரிசையிலும் 10இலட்சம் டிக்கெட்டுகள்) விற்பனைக்கு வெளியிட்டுள்ளது.

இப்போது விற்பனைக்கு வெளியிடப்பட்டிருக்கும் 'கே', 'எல்' என்ற இரு வரிசைகள் டிக்கெட்டுகள் மாவட்ட வாரியாகக் கீழ்க் கண்டவாறு ஒதுக்கப்படும்:—

சென்னை நகரம் 3.2 இலட்சம்.

தஞ்சை, கோவை ஒவ்வொன்றும் 2 இலட்சம்.

மதுரை 1.94 இலட்சம்.

திருச்சி 1.80 இலட்சம்.

தென்னுற்காடு, சேலம், இராமநாதபுரம், திருநெல்வேலி ஒவ்வொன்றும் 1.40 இலட்சம்.

வடஆர்காடு, செங்கற்பட்டு ஒவ்வொன்றும் 1 இலட்சம்.

கன்னியாகுமரி 52,000.

தர்மபுரி 48,000.

நீலகிரி 34,000.

மொத்தம் 20 இலட்சம் டிக்கெட்டுகள்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்கள் ஆசிரியராகவும், வெளியீட்டாளராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு வழுதி அச்சகத்தில் (24, ஐயாமுதலியார் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது

புயல் நகர்ந்தது!

பயிர் வேலைகளைத் துவங்கலாம்

சென்னை, அக். 25—

வங்கக் கடலில் உருவாகிய புயல் வடக்கே நகர்ந்திருப்பதால், பெரும் மழையுள்ள பகுதிகள் தவிர மற்ற இடங்களில் பயிர்ப் பாதுகாப்பு --- உரமிடுதல் முதலியவற்றை மீண்டும் துவக்கும்படி தமிழக விவசாயப் பெருமக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

சம்பாப் பயிருக்கு மேட்டூர் நீர்

அதிகாரிகள் முடிவு

தஞ்சை, அக். 25—

புயலின் விளைவாகப் பெருமழை பெய்யும் என எச்சரிக்கப்பட்டபோதிலும், தஞ்சை மாவட்டத்தில் எங்கும் மழை பெய்யவில்லை.

இப்போது அங்கு சம்பாப் பயிருக்கு மழை அவசியமாதலால், மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்து தண்ணீர் விடுவதென அதிகாரிகள் முடிவு செய்திருக்கின்றனர்.

இத்தண்ணீர், இரு நாட்களில் கல்லணைக்குப் போய்ச் சேரும்.

விளைச்சல் அதிகரிக்கும்

மழை பெய்ததன் நற்பலன்

புதுடில்லி, அக். 25—

இத்திங்களில் பரவலாகப் பெய்த மழையினலும், இந்த ஆண்டில் உணவு உற்பத்தி பற்றிய அச்சநிலைமை நீங்கிவிட்டதாகவும் கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டில் உணவு உற்பத்தி கூடுதலாக இருக்குமென்றும் கருதப்படுகிறது.

கடந்த ஆண்டில் உணவு உற்பத்தி 633 இலட்சம் டன்களாகும். வறட்சி இருந்தபோதிலும் இந்த ஆண்டில் அதிக விளைச்சல் தரும் ரகங்கள் ஏராளமான நிலங்களில் சாகுபடி செய்யப்பட்டிருப்பதால், ஏற்குறைய சென்ற ஆண்டு கிடைத்த அளவுக்கு உற்பத்தி யாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கா. காளிமுத்து

நிகழ்ச்சிகள்

அக். 26: பிரான்மலை; 27 : மானுமதுரை; நவ. 2; திருத்துறைப் பூண்டி வட்டம்; 3: கன்னியப்பிள்ளை பட்டி; 9 : மதுரை; 10: திருநெல்வேலி.

மயிலை சிவமுத்து நினைவு நாள்

பேராசிரியர் மயிலை சிவமுத்து நினைவு நாள், 26—10—68 மாலை 6 மணிக்கு சென்னை மாணவர் மன்றத்தின் சார்பில்--மன்றக் கட்டிடத்தில் நடைபெறும்; டாக்டர் சாலை கோவிந்தராசன் தலைமை வகிப்பார்; டாக்டர் மு வரதராசனர் விழா மலரை வெளியிடுவார்; திரு. ம. பொ. சிவஞானம் எம். எல். ஏ. சிறப்புரையாற்றுவார்.

தேர்தல் பணியில் புதுவை மீவட்டத் தோழர்கள்

சென்னை, அக். 25—

புதுவை மாவட்டத் தி. மு. க. செயலாளர் எம். ஏ சண்முகம், புதுவை பெருநகரச் செயலாளர் கு. முருகையன், மற்றும் புதுவைத் தோழர்கள் சி. என். பார்த்தசாரதி, இராமையன் ஆகியோர் சைதைத் தொகுதியில் தங்கி, சென்னை மாநகராட்சித் தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

மறைவு

மதுரை மாவட்ட 34-வது வட்ட தி. மு. க. பிரதிநிதியும், அண்ணு பாசறைச் செயலாளருமான சே. ஜின்னு 15—10—68-ல் இயற்கை யெய்திவிட்ட செய்தி வருத்தத்துடன் அறிவிக்கப்படுகிறது. அன்னரது குடும்பத்துக்கு பேரறிஞர் அண்ணு பாசறை சார்பாக ஆழ்ந்த அனுதாபமும் ஆறுதலும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

வ. களத்தூர் தி. மு. க. கிளையின் பொருளாளரும் நீண்ட நாள் கழகத் தொண்டருமான ஆர். முகம்மது யாகூப் 21—10—68 அன்று இயற்கை யெய்தினர்; மாலை அன்னரின் உடல் அடக்கம் செய்யப்பட்டது. கழகத் தோழர்கள் தங்கள் இறுதி மரியாதையைத் தெரிவித்துக்கொண்டனர்.

நவமலை தி. மு. க. கிளைச் செயலாளர் ஏ. எஸ். காளை அவர்களின் பெண் மகவு 9—10—68-அன்று இயற்கையெய்திவிட்டது குறித்து மின்னம்பாடி தி. மு. க. கிளையின் சார்பில் அனுதாபமும் ஆறுதலும் தெரிவிக்கப்படுகிறது.

தூய்மையான இதயமிருந்தால்!

"இதயம் தூய்மையாக இருந்தால், இன்னல் நேரினும் அதை எதிர்ப்பதற்கான மனி தர்களையும், நடைமுறைகளையும் அதுவே கொண்டுவரும்."

—காந்தியார்